செ.வெ.எண்: 51 நாள்:18.08.2016

**புதுக்கோட்டைமாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தினை இரண்டாம் கட்டத்திற்கு எடுத்து செல்வதற்கு உலக வங்கி குழுவினர் ஒப்புதல் வழங்கினால் தமிழகஅரசு சார்பில் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து சிறப்பான ஒத்துழைப்பு வழங்கும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு வரும் உலக வங்கி குழுவினர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்களை 17.08.2016 அன்று நேரில் பார்வையிட்டு மாவட்ட நிர்வாகம் புதுவாழ்வு திட்டத்திற்கு அளித்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டதுடன் ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

இந்த உலக வங்கி குழுவினருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டு கூறியதாவது:

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியோடு 25 மாவட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தங்கிய ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளில் வறுமையை குறைக்கவும், வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும் புதுவாழ்வு திட்டம் 2005ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் இரண்டாம் கட்டமான நீடித்த வாழ்வாரதாரத்தினை உறுதி செய்திடும் வகையில் உலக வங்கியினர் திட்டம் வகுத்து வருகின்றனர். இதற்காக உலக வங்கி குழு பிரதிநிதிகளான திரு.சோவிக் மித்ரா, Ms.ஜாக்குலின் ஜீலியன், திரு.ஹனிப் ரஹமத்துல்லா மற்றும் TNRTP பிரதிநிதிகளான Ms.புவனேஸ்வரி, திரு.கார்த்திக், திரு.மாணிக்கம் ஆகியோர் நமது மாவட்டத்திற்கு 17.08.2016 அன்று வருகை தந்தனர்.

இக்குழுவினர் மாவட்ட ஆட்சியரகத்திற்கு வருகை புரிந்து நமது மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு தேவையான உதவிகளை அளித்து வரும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். மேலும் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மக்களே இத்திட்டத்தினை ஏற்று நடத்தும் வகையில் கிராமங்களில் உள்ள மிகவும் ஏழை மற்றும் ஏழை குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோரான நலிவுற்றோர்கள் ஆகியோர்கள் கண்டறியப்பட்டு அவர்களை கொண்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்ற மக்கள் அமைப்புகளை ஒவ்வொரு ஊராட்சியிலும் உருவாக்கியும் அவற்றுக்கு நிதி விடுவித்து பல்வேறு செயல்பாடுகள் மூலம் பால் உற்பத்தியில் தினமும் 50000 லிட்டர் என்று இருந்தது. தற்பொழுது இதன் அளவு 100000 லிட்டர் என்ற அளிவில் உயர்ந்துள்ளது.

மேலும் இளைஞர்களுக்கு ஜேசிபி, டிரைவிங் மற்றும் நர்ஸிங் பயிற்சி அளித்து உரிய வேலைவாய்ப்பினை பெற்றுத்தந்தது, மாற்றுத்திறனாளிகள் மாநில அளிவில் நடக்கும் நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு தொடர்ந்து 3 ஆண்டுகளாக முதன்மை இடததினை பிடித்தது போன்ற பல்வேறு சாதனைகள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே நமது மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் புதுவாழ்வு திட்டத்தின் 2ம் கட்ட திட்டத்திற்கு உலக வங்கி குழுவினர் ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்பட தமிழகஅரசு சார்பில் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் எனவும் உலக வங்கி குழு பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

..2..

முன்னதாக உலக வங்கிக்குழு பிரதிநிதிகள் நமது மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ”புதுக்கோட்டை இயற்கை விவசாய உற்பத்தியாளர் கம்பனி லிட், என்ற உற்பத்தியாளர்கள் குழுவின் இயக்குனர்கள் குழுமத்தினரை சந்தித்து உற்பத்தியாளர்கள் கம்பெனி உருவாக்கதிற்கான காரணம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும், தற்பொழுது அதன் வளர்ச்சி, இலக்குகள் குறித்தும் கேட்டறிந்தனா. பின்பு இலுப்பூரில் டாக்டர்.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு நடந்து ”இலுப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கம்பெனி லிட், உற்பத்தியாளர்கள் குழுவின் இயக்குனர்கள் குழுமத்தினை சந்தித்து இக்கம்பெனி மூலம் பால் உற்பத்தி, இயற்கை விவசாய காய்கள் மற்றும் அதன் உற்பத்தி,நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் இயற்கை பருப்பு வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றி கேட்டறிந்தனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் புதுவாழ்வு திட்ட மாவட்ட திட்ட மேலாளர் திருமதி.எஸ்.வசுமதி, உதவி திட்ட மேலாளர்கள் திரு.வி.கோபால் (சமூக பாதுகாப்பு) மற்றும் திரு.ஆ.செந்தில்முருகன்(கிராம நிதி) ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**